பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை 28.05.2024 கதிர் 202

# போர் முடிந்து 15 ஆண்டுகளாகியும் வடக்கின் நிலை மகிழ்ச்சியானதல்ல

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் கவலை

போர் முடிற்து15 வருடங்களாகியும் வடக்கின் நிலைமை குறித்து எம்மால் மகிழ்ச்சியடைய முடியாது. போர் முடிவடைந்த பின்னர் சமாதானத்தின் பயனைக்கூட சரிவர இச் சமூகம் பெறவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 202 ஆவது கட்டமாக ஸ்மார்ட்வகுப்பறைஉபகரணங்கள், திருகோணமலை, ☞ 2

## இ னி து ரகசியம் அல்ல!

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அதாவது காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவேன் என்று எதிரக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்துவார் என்று சஜித் சொல்லவில்லை, அவரும் பொலிஸ் அதிகாரம் இன்றிய 13 குறித்துத்தான் பேசுகிறார், எதற்கும் அவரிடம் கேட்டு அவர் முழுமையாக 13ஐ நடைமுறைப்படுத்துவாரா என்று உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் தெரிவித்திருந்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்த நிலையில் சுமந்திரன் இந்த விடயத்தைப்போட்டுடைத்திருக்கிறார்.

விக்னேஸ்வரன் உடல்நலக் குறைவோடு இருந்தார் என்பதனால் அவரை அவரது யாழ்ப்பாண வீட்டுக்குச் சென்று ☞ 2

## சிவப்பு எச்சரிக்கை

பலத்த காற்று மற்றும் கடற்பகுதி குறித்து வளிமண்டளவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசுவதுடன் அவ்வப்பொழுது கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மறு அறிவித்தல்வரை கடல் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என கடல் மற்றும் மீனவ சமூகத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## புலமைப்பரிசிலுக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

க.பொ.த (உயர்தர) தகவல்தொழிநுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களுக்கு இலங்கைத் தொலைத் தொடர்புஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி நிதியம் இணைந்து வழங்கும் புலமைப்பரிசில் வேலைத் திட்டம் 2024/2025 இற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி ஜூன்மாதம் 07 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் மிக விரைவில் ☞ 2

## எதிர்க் கட்சியாக இருந்தாலும்கூட அபிவிருத்தியில் அரசுக்கு ஆதரவு

### ஜனநாயக கூட்டணி எம்.பி. வினோ தெரிவிப்பு

எதிர்க் கட்சியாக இருந்தாலும் அரசின் அபிவிருத்திக்கு முடிந்தளவு ஆதரவு வழங்கிவருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

'உறுமய' வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மன்னார் மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய மக்களுக்குகாணிஉறுதிகளை வழங்கும் நிகழ்வு வவுனியா மோஜோவிழாமண்டபத்தில் வழங்கப்பட்டபோது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 2

## மன்னாரின் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி தீர்வு காணவேண்டும்

### செல்வம் எம்.பி. வலியுறுத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாருக்குச்செல்லாதபோதும் அங்குள்ள மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்;டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்,

'உறுமய' வேலைத் திட்டத்தின்கீழ்வவுனியா மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மன்னார் மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு வவுனியா மோஜோ விழா மண்டபத்தில் வழங்கப்பட்டபோது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்தது தொடர்பில் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம். காணி உறுதி வழங்குவதன் ஊடாக இப்பகுதி மக்களுக்கு விடிவு காலம் கிடைத்துள்ளது. இது போதுமானதல்ல.

20 இலட்சம் காணி உறுதி வழங்கப்படுமானால் வன்னியில் காணி உறுதி அற்ற எவரும்எஞ்சமாட்டார்கள். பிரதமராக இருந்த போது நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆஸ்பத்திரிகளை நிர்மாணிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். அவற்றை திறந்து வைத்தது தொடர்பில் எமது நன்றியை தெரிவிக்கிறோம்.

ஜனாதிபதி மன்னாருக்கு விஜயம் செய்யாத போதும் மன்னாரில் உள்ள பிரச்சினைகள் குறித்தும்கவனம்செலுத்தி அவற்றுக்குத் தீர்வு ☞ 2

## எலான் மஸ்க்கின் முதலீட்டை ஈர்த்தால் நாடு வளர்ச்சியுறும்

### ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் தெரிவிப்பு

டெஸ்லா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ்நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க் போன்ற உலகப் புகழ்பெற்ற வர்த்தகர்களின் முதலீடுகளை ஈர்க்க முடிந்தால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாக அமையும் என காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

'Starlink' போன்ற திட்டத்தில் இணைவதன் மூலம் நாட்டின் பின்னடைந்தபிரதேசங்களுக்கு இணைய வசதிகளை பிரச்சினையின்றி வழங்க முடியும் எனவும் சுற்றுலாத்துறை உட்பட பொருளாதாரத்திற்கு பயன்படும் பல துறைகளின் வளர்ச்சிக்கு இது உறுதுணையாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் ☞ 8

## தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் ஜூன் 9 யாழ்ப்பாணத்தில் விவாதம்

பொதுவேட்பாளர் நியமிப்பதில்உள்ளசாதக பாதகங்களை ஆராயும் விசேட கூட்டத்தை அடுத்தமாதம் 9 ஆம் திகதி யாழில் ஏற்பாடு செய்துள்ளதாகவும் அதில் அனைவரையும் பங்கெடுக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அழைப்புவிடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த சுமந்திரன் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:.

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் சந்திப்பொன்றை நான் மேற்கொண்டிருந்தேன். அதாவது

தமிழ்பொது வேட்பாளரை நிறுத்துவது சம்பந்தமாக முனைப்பாக செயற்பட்டு கொண்டிருக்கிற சிவில் சமூகத்தினர் சில பத்தி எழுத்தாளர்கள் என்னை சந்திக்க வேண்டுமெனக் கேட்டிருந்தார்கள். அவர்களோடு நிறைவான கருத்துமிக்க கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இந்த யோசனைக்கு மாறாக நான் ☞ 2

## வடக்கு மாகாண சுகாதார சேவைக்கு நெதர்லாந்து அர்ப்பணிப்போடு ஆதரவு

### அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

வடக்குமாகாணத்தில் சுகாதார சேவைகளுக்கு ஆதரவளிப்பதிலும் நெதர்லாந்து அரசின் அர்ப்பணிப்போடுசெயற்படுகிறது என்று இலங்கைக்கானநெதர்லாந்தின் தூதுவர்பொனிஹோபெக் தெரிவித்தார்.

நெதர்லாந்துஅரசாங்கத்தின் நிதிஉதவியுடன் 3329 மில்லியன் ரூபா செலவில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில்நிர்மாணிக்கப்பட்ட இருதய மற்றும் சிறுநீரக நோய் பிரிவு திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் திறக்கும் நான்காவது மருத்துவமனை இது. 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி தெதர்லாந்து நிறுவனமான வமெட் (VAMED) மற்றும் இலங்கை சுகாதார அமைச்சுடன் கைச்சாத்திடப்பட்ட ஒத்துழைப்பு உடன்படிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டபயணம் இன்று வெற்றிகரமாக நிறைவுபெற்றுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் வடமாகாணத்திற்கு அதிநவீன மருத்துவ உபகரணங்களுடன் நான்கு வைத்தியசாலைகள் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட மொத்தத்தொகையில்75 சதவீத சலுகைக் கடனாகவும், எஞ்சிய தொகை நெதர்லாந்து அரசின் உதவியாகவும்வழங்கப்பட்டது.

நெதர்லாந்து அரசு வழங்கும் மானியத்தின் பெறுமதியை மொத்த செலவில் 35 சதவீதமாக உயர்த்த பின்னர் முடிவு செய்யப்பட்டது. இந்த மானியத்தின் அதிகரிப்பு, இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதிலும், வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகளுக்கு ஆதரவளிப்பதிலும்நெதர்லாந்து அரசின்அர்ப்பணிப்பைக் காட்டியுள்ளது என்றார்.

## உறுமய காணி உறுதிகளால் சொத்து மதிப்பு இனி உயரும்

### ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

'உறுமய' திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காணி உறுதிகளினால் சொத்துக்களின் மதிப்பு உயரும்என்றுஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

'உறுமய' வேலைத் திட்டத்தின்கீழ்வவுனியா மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளையும்மன்னார்மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய 700முழுஉரிமையுள்ள காணி உறுதிகள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் வவுனியா மோஜோ விழா ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பார்வையிட்டார் ரணில். அப்போது இருவருக்கும் நடந்த உரையாடல் பற்றிக் குறிப்பிட்டபோது, சஜித்தின் 13 குறித்து சந்தேகத்தை ரணில் கிளப்பினார் என்று விக்னேஸ்வரன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த சுமந்திரனிடம் இதுபற்றி கேள்வி எழுப்பப்பட்டபோது, அவர் தனக்கும் சஜித்துக்கும் இது தொடர்பில் நடந்த உரையாடலைத்தெளிவுபடுத்தினார்.

மேதினக் கூட்டம் ஒன்றில் சஜித் பேசும் போது 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்திருந்தார். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் நான் அவரைச் சந்தித்தபோது, தனது உரையைக் கேட்டீர்களா அதில் 13 பற்றி நான் கூறியிருக்கின்றேன் என்று தெரிவித்தார்.

நான் ஆம் அந்தப் பேச்சை நான் கேட்டேன் என்று கூறிய போது, 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று கூறியிருக்கின்றேன், காணிபொலிஸ் அதிகாரங்கள் உட்பட முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்றுதான் கூறியிருக்கின்றேன் என்றார். அவர் அதனைச்செய்வாரா இல்லையாக என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், சஜித் அப்படித்தான் என்னிடம் தெரிவித்தார் என்றும் சுமந்தினர் கூறினார்.

2023 பெப்ரவரி 4க்குள் 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்துவேன் என்று தெரிவித்துக்கொண்டு ஆரவாரப்படுத்திய ரணில் பின்னர் எதிர்ப்புக்களைக் கண்டுபயந்துபொலிஸ்அதிகாரமற்ற 13 என்று பதுங்கிக்கொண்டார். கடைசியில் அவர் 13 தொடர்பில் ஒன்றையுமே செய்யவில்லை. இதனால் அவருக்குத் தமிழர்கள் மத்தியில் முன்னர் இருந்த மதிப்பு அடியோடு அழிந்து போய்விட்ட நிலையில், தனது ஆப்பை எடுத்து (13 என்ற ஆப்பு) சஜித் தனக்கே இறுக்குவதைப் பொறுக்க முடியாமலோ என்னவோ அல்லது 13 பற்றிய சஜித்தின் கருத்து ரணிலுக்கு எதிரானதாக மாறிவிடும் என்று எவராவது கருதினார்களோ என்னவோ சஜித்தின் 13 பற்றிய சந்தேகத்தைக் கிளப்பிவிட்டார்கள்.

சுமந்திரன் இப்போது அதனை உடைத்துப் போட்டுவிட்டார். உடனே இனி சுமந்திரன் சஜித்தைத் தான் ஆதரிக்கப் போகிறார்கள் என்று சிலர் கம்புசுத்தத் தொடங்குவார்கள் என்பது தெரியும். அதனால்தானோ என்னவோ எச்சரிக்கையாக சுமந்திரனும் சஜித் அதைச் செய்வாரோ என்பது எனக்குத் தெரியாது என்று 'ஜகா' வாங்கிக்கொண்டார்.

அதுமட்டுமல்ல சஜித்துடனான தனது உரையாடலில் 13ஐ முழுமையாகநடைமுறைப்படுத்துவதால் மட்டும் தமிழர்கள் உங்களை ஆதரிப்பார்கள் என்று நினைக்காதீர்கள் என்று தான் சொல்லியிருந்தார் என்பதையும் குறிப்பிட்டார். 2019 தேர்தல் அறிக்கையில் சஜித் அரசியல் தீர்வு குறித்துக் குறிப்பிட்டிருந்த விடயங்களையும் சுட்டிக்காட்டி, அவற்றுக்கு என்ன கதி என்று கேட்டபோது, 13க்கு அப்பால் தான் உறுதியளித்தபடி தீர்வுஒன்றைக்காண்பேன்என்றும் அது குறித்துத் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்படும் என்றும் சஜித் உறுதியளித்தார் என்றும்மேலும்கூறினார்சுமந்திரன்.

ஆக மொத்தத்தில் ரணிலும் அவருக்கு ஆதரவானவர்களும் என்னதான்முக்கியமுனாங்கினாலும் இந்த விடயத்தில் ரணில் தமிழர்களிடம் இழந்துபோய்விட்ட ஆதரவுத் தளத்தை மீண்டும் கட்டியெழுப்பிவிடமுடியும் அதுவும் ஜனாதிபதித்தேர்தலுக்குஇப்படிப்பட்ட குறுக்கு அரசியல் வழிகள் மூலம் கட்டியெழுப்பிவிட முடியும் என்று நான் நினைக்கவில்லை. ரணில் எவ்வளவு பெரிய நரித்தந்திரமுள்ள அரசியல்வாதியாக இருந்தாலும் இது விடயத்தில் அவரது தந்திரங்கள் எவையும் தமிழர்களிடம் பலிப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகப் படவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## போர் முடிந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோமரங்கடவல மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2019 மே 18 இல் போர் நிறைவடைந்தது. போர் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், வடக்கின் நிலைமை குறித்து எம்மால் மகிழ்ச்சியடைய முடியாது. போர் முடிவடைந்தபின்னர் சமாதானத்தின் பயனைக்கூட சரிவர இச்சமூகம் பெறவில்லை.

சமாதானத்தின் பயன்கள் சரியாகக் கிடைத்திருந்தால் இங்குள்ள பாடசாலைகள்கூட தேசியப் பாடசாலைகளாக மாறியிருக்கவேண்டும். பெயர்பலகையுடன் சுருங்கிய தேசியப் பாடசாலைகளை இங்கு நாம் நாடவில்லை. ஆனால் இங்கு அவ்வாறான எதுவும் நடக்கவில்லை. இன்னும் கூட இப்பிரதேசங்களில் யுத்தத்தால் அழிந்து போன பாடசாலைகள் இருக்கின்றன. சமாதானம் ஏற்பட்டு 15 வருடங்களாகின்றன.

போரை வெற்றிகொண்டதற்காக எத்தனை தடவை வாக்களித்தீர்கள். இன்னும் எமக்கு போரைக் காரணம் காட்ட முடியாது. இப்பிரதேச பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் நீதி நியாயம் நிலைநாட்டப்படவில்லை.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத வரலாற்றில், அரசியலால் நம்பிக்கையிழந்து போயுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு தூய நம்பிக்கையை என்னால் மாத்திரமே வழங்க முடியும். வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் நாம் மாத்திரமே எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு மக்களுக்காக சேவைகளை முன்னெடுத்துள்ளோம்.

டிஜிட்டல் புரட்சியால் நம் நாடு வலுப்பெறும் என்று தலைவர் கள் சொன்னாலும், தகவல் தொழில் நுட்பக் கல்வி முறைசாரா போக்கிலயே இருந்து வருகிறது. இவ்வாறு நடந்து கொண்டு தகவல் தொழில்நுட்பக் கல்விப் போக்கை சரியான முறையில் முன்னெடுக்க முடியாது. பாடசாலைகளில் இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

இந்த மாற்றம் பாடசாலைகளில் இருந்து ஏற்பட வேண்டும். இளம் சந்ததியினர், இந்நாட்டின் அடுத்த மனித வளம், பாடசாலைகளிலயே இருக்கின்றனர். பிரயோக ரீதியாக இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதை விடுத்து, வாயளவில் பேசிவருவதில் இந்த டிஜிடல் புரட்சி ஒருபோதும் ஏற்படாது

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் நிறுவப்படும். இதன் ஊடாக பெண்கள் கூட தகவல் தொழிநுட்பத்தில் வலுவூட்டப்படுவார்கள். இதற்கான ஏற்பாடுகளை எமது ஆட்சியில் நாம் முன்னெடுப்போம் என்றார்.

## புலமைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் தகுதிபெற்றுள்ளமாணவமாணவிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் நிரப்பி குறித்த திகதிக்கு முன்னர் தமது பிரதேச கிராம உத்தியோகத்தர் மற்றும் செயலாளரின் பரிந்துரையுடன், வகுப்பாசிரியர், பாடசாலை அதிபர், மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் செயலாளர், ஜனாதிபதி நிதியம், இலக்கம் 35, மூன்றாம் மாடி, லேக்ஹவுஸ் கட்டிடம், டீ. ஆர் விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்பிவைக்கவும்.

கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் பெயர் மற்றும் பாடசாலை உள்வாங்கப்பட்டுள்ள கல்வி வலயத்தின் பெயரையும் குறிப்பிட வேண்டும்.

இந்த புலமைப்பரிசில் வேலைத் திட்டத்தின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினம் மே மாதம் 22 ஆம் திகதி முடிவடைந்துள்ள போதிலும், கடந்த சில நாட்களில் நிலவிய பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் மோசமான காலநிலை காரணமாக விண்ணப்பங்களைஅனுப்பமுடியாத மாணவர்கள் அதிகமானோரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காண வேண்டும். காணி உறுதி பெற்றவர்கள் அவற்றை முறையாகப் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

## உறுமய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மண்டபத்தில் வழங்கப்பட்டது.

அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1935 முதல், மக்களுக்கு விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் காணிகளின் உரிமம் வழங்கப்பட்டது. ஆனால் நிலத்தின் முழுமையான உரிமை வழங்கப்படவில்லை. எனவே, உங்களுக்கு முழு உரிமையுடன் காணிஉறுதி வழங்க முடிவு செய்தேன். இவ்வாறு முழு உரிமையுடன்காணிஉறுதிப்பத்திரம் வழங்கினால் மக்கள் நிலத்தை விற்றுவிடுவார்கள் என்று பலர் கூறினர். இரண்டு தலைமுறைகள் அனுபவித்த நிலத்தை நீங்கள் விற்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

கடந்த காலங்களில் கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். அந்தநெருக்கடியின் காரணமாக இந்நாட்டில் சுமார் எழுபது சதவீத மக்களின் சொத்து மதிப்பு வீழ்ச்சியடைந்தது. இன்று வழங்கப்படும் காணி உறுதியினால் உங்களின் சொத்து மதிப்பு உயரும்.

இந்த நிலங்களைப் பயன்படுத்தி நவீன விவசாயத்தை உருவாக்க பங்களிக்க வேண்டும். இதனூடாக நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்திற்குப் பங்களிக்க முடியும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும்போது நீங்கள் செய்யும் மிகப்பெரிய பங்களிப்பாக இது இருக்கும். மல்வத்துஓயா திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் மன்னார் மாவட்டத்தில் பயிர்ச்செய்கையை இதனைவிட இலகுவாக மேற்கொள்ள முடியும்' எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# இந்தியத் தூதுவர் மகிந்தவுடன் சந்திப்பு



கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜா நேற்று திடீரென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து உரையாடினார்.

இந்த சந்திப்பானது விஜேராம மாவத்தையில் உள்ள மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றுள்ளது. எனினும் இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து உனடியாகத் தெரியவரவில்லை.

## சிவப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கல்பிட்டியில் இருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.5 - 3.0 மீற்றர் வரை உயரக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதன் காரணமாக கல்பிட்டி, கொழும்பு, காலி முதல் மாத் தறை வரை கடல் அலைகள் நிலப் பரப்பை நோக்கி வருவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

வளிமண்டலவியல் திணைக் களத்தினால் வெளியிடப்படும் குறித்த அறிவிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு மீனவசமூகத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்குக்கு மூன்று நாட்கள் பயணமாக வந்து பல அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார். எமது பிரதேசத்தில் நடைபெறும் இந்த அபிவிருத்தித் திட்டங்களில் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு முடிந்தளவு ஆதரவை அரசுக்கு வழங்கி வருகிறோம். ஜனாதிபதி முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைக்க ஜனநாயகத் தமிழ் தேசியக்கூட்டணி தயாராக உள்ளது. வாடகை காணியில் வாழ்ந்த உணர்வுடன் வாழ்ந்த மக்களுக்கு விடுதலை கிடைத்திருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும் - என்றார்.

## தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்த கருத்துக்கள் சம்பந்தமாக அதனுடைய காரணங்களை எடுத்துச் சொல்லியிருந்தேன். இந்த சூழ்நிலையிலே இப்படியானதொரு முன்னெடுப்பு செய்வதற்கான தங்களுடைய காரணங்களையும் அவர்கள் எங்களுக்கு எடுத்துச் சொல்லியிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தின் இறுதியில் இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் பொதுவெளியிலே பகிரங்கமாக ஆரோக்கியமான முறையிலே கருத்து பரிமாற்றம் செய்வது நல்லது என்கின்ற என்னுடைய யோசனையை அவர்களிடத்தே நான் சொன்னபோது அவர்களும் அதனை முழுமனதோடு ஏற்றுக் கொண்டார்கள்.

சென்றவாரம் அல்லது நேற்றைய தினம் அப்படியொரு கூட்டத்தை ஒழுங்கு செய்ய நான் நினைத்திருந்தாலும் கூட சில பல காரணங்களினாலே அது பிற்போடப்பட்டிருக்கிறது.

இப்பொழுது வருகிற யூன் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் பாரியளவிலான கூட்டமொன்று இரு தரப்பு நியாயங்களையும் ஆரோக்கியமான முறையிலே கருத்துக்களை பரிமாறுகிற வகையில் செய்வதற்கு நான் ஒழுங்கு செய்திருக்கிறேன்.

இரு தரப்பில் இருந்தும் சிலரை அந்தக் கட்டத்தில் தங்களுடைய கருத்துக்களை முன்வைக்குமாறு அழைப்பு விடுத்திருக்கிறேன்.

அப்படியான உரையாடல் நடைபெறுவதுநல்லது. ஏனென்றால் பொது மக்களுக்கும் இதனுடைய சாதக பாதகங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். இதைக் குறித்து மக்களுடைய மனதிலே எப்படியான சிந்தனைகள் இருக்கிறதென்பதையும் நாங்களும் ஒரு அளவுகோளிட்டு அறியக் கூடியதாக இருக்கும்.

ஆகவே ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசாமல் இதற்குப் பின்னணியில் இது இருக்கிறது அதற்குப் பின்னணியில் அது இருக்கிறது என்ற இந்தப் பின்னணிக் கதைகள் எல்லாம் விடுத்து சரியான விதத்தில் ஒரு கருத்துப் பரிமாற்றம் செய்வது நல்லது. அதற்கான ஒரு சூழலை நாங்கள் உருவாக்குகிறோம். எனவே தயவுகூர்ந்து அனைவரும் அந்த ஒரு ஆரோக்கியமான கருத்து பரிமாற்ற சூழலை பேணுமாறு மிகவும் அன்போடு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படியான விடயங்களிலே நாங்கள் எடுக்கிற தீர்மானங்கள் மக்கள் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதிலே மக்களுடைய பங்களிப்பும் இருக்க வேண்டும். ஆகவே இந்த விடயத்தை நாங்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை அம்பாறை மாவட்டத்திலும் நடந்தது!









(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை மாளிகைக்காடு தனியார் விருந்தினர் விடுதியில் சிறப்பாக நடைபெற்றது.

தூய்மையான அரசியலுக்காகச் செயற்படும் மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அந்த மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ஸ உட்பட உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் கிராம ரீதியாக அழைக்கப்பட்ட மூவர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சமகால அரசியல் தொடர்பில் கலந்துரையாடலில் பங்கேற்று தத்தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

நாம் எமது வாக்குகளை அறிவு பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களை மாத்திரமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்ப வேண்டும். இதுவே எமது தலையான கடமையாகும் என்று மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் வைத்தே ஆக வேண்டும். எனவே மக்கள் விழிப்படைய வேண்டும் என இக்கலந்துரையாடலில் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.(05)

# மாவட்டமட்ட மெய்வன்மைப் போட்டியில் தம்பலகாமம் பிரதேச அணி சாம்பியன்

## 6ஆவது தடவையாகவும் சுவீகரித்தது



(ஹஸ்பர் ஏ.எச்)

மாவட்ட மட்ட விளையாட்டு போட்டி கந்தளாய் லீலரத்ன மைதானத்தில் இடம் பெற்றது. விளையாட்டு திணைக்களம் ஊடாக நடத்தப்பட்ட குறித்த போட்டி



கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச அணி மெய்வல்லுனர் போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது.

மேலும் உதைப் பந்தாட்டம்,கரபந்து ஆகிய போட்டிகளிலும் சம்பியன் பட்டத்தை தம்பலகாமம் பிரதேச அணி முடிசூடியது.

இதில் தங்கப் பதக்கம் 05, வெள்ளிப் பதக்கங்கள் 06, வெண்கலப் பதக்கங்கள் 03 உட்பட ஆறாவது தடவையாகவும் மெய்வல்லுனர் போட்டியில் சம்பியனாக தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணி சம்பியனாக முடிசூடியது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி வழிகாட்டுதல்களுக்கிணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் குறித்த விளையாட்டு வீரர்களுக்கான சிறந்த பயிற்சிகளை வழங்கிவந்துள்ளார்.

குறித்த போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மாகாண விளையாட்டு பணிப்பாளர் யு.சிவராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# இளைஞர் தலைமைத்துவ பயிற்சிப் பாசறை நிகழ்வு



(எம்.எப்.றிபாஸ்)

கிழக்கு இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் இவ்வருடம் கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான ஆளுமை வளர்ச்சி பயிற்சி பாசறையும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட் இன் அனுசரணையில் கிழக்கு இளைஞர் அமைப்பின் தலைவர் தானிஷ் ரஹீமத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு மயோன் நிறுவனத் தின் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்ட இவ்பயிற்சி பாசறையில் தலைமைத்துவ செயற்பாடு, ஒழுக்கவிழுமியங்கள், சகோதரத்துவ பண்பாடு,தனிநபர் ஆளுமைகள் என பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்றதுடன் பயிற்சி நிறைவின் போது பிரதம அதிதியால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.(05)





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுத்திச் சுத்தி சுப்பற்ற கொல்லை

**அடங்கி அமிழ்ந்து ஆழத்திற்குப் போயிருந்த தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை மீண்டும் தமிழ் அரசியல் தளத்தின்மேற்தளத்திற்குஇழுத்துவந்துவிட்டிருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.**

**பெரும் ஆரவாரத்துடன் சித்திரை 30 வவுனியாவில் கூடிய வடக்கு கிழக்கு பொது (குடிமை) அமைப்புக்களின் கூட்டிணைவு என்ற புதிய அமைப்பு ஒன்று அரசுத் தலைவர் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்று தீர்மானித்தது.**

**அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து அரசியல் களம் பரபரப்பானபோதும், கொள்கையளவில் தமிழ் பொது வேட்பாளர் முடிவை ஆதரிப்பதாகத் தெரிவித்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் பெரும்பாலானவை அந்த யோசனையில் இருந்து பின்னர் நழுவிக்கொண்டதை அடுத்து இந்த விவகாரம் கூட்டிணைவில் உள்ள சிலரது முன்னெடுப்பாகமுடங்கிக்கொண்டது. அதற்குமுன்னதாக இந்த விடயத்தில் ஆதரவாகவோ எதிராகவோ எந்த முடிவையும் இப்போதைக்கு எடுக்கப்போவதில்லை, அது தேவையுமில்லை என்று தமிழ் அரசுக் கட்சியும் அறிவித்திருந்தது.**

**இதனால் தமிழ்த் தேசிய அரசியல் என்ற தளத்தில் நிற்கும் கட்சிகளில் முதன்மையானவை இதுவிடயத்தில் சாதகமான முடிவை அறிவிக்காதிருக்கையில், அவற்றின் முழுமையான ஆதரவின்றி இந்த முயற்சியை வெற்றிபெறச் செய்ய முடியாத கூட்டிணைவு, தொடர்ந்தும் தமிழ் பொது வேட்பாளர் குறித்துப் பேசி வந்தாலும் அது தொடக்கத்தில் இருந்ததைப் போன்று தீவிர அரசியல் முன்னெடுப்பாக இருக்கவில்லை. நீர்த்துப்போய்க் கொண்டிருந்தது.**

**இந்த நிலையில் கட்சியைத் தாண்டி தனி மனிதர்களையும் சந்தித்து தமது யோசனை குறித்துப் பேசத் தொடங்கியிருக்கிறது புதிய கூட்டிணைவு. அப்படி சுமந்திரனுடன் அது நடத்திய ஒரு கூட்டத்தில் இது பற்றி இப்படி இரகசியமாகப் பேசுவதைவிட ஒரு பகிரங்க விவாத்தின் மூலம் பேசினால் மக்களுக்கும் அது குறித்த தெளிவு ஏற்படும் என்று தான் முன்வைத்த யோசனையை மற்றவர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்று சுமந்திரன் தெரிவித்தார். அதனடிப்படையில் ஆனி 9 அன்று யாழ்ப்பாணத்தில் இந்த விவாதம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

**இந்த விவாத்தின் மூலம் ஏதாவது நடக்குமா என்று கேட்டால் இல்லை என்பதே உண்மை. இ–ரு தரப்பினரும் மேடைபோட்ட தத்தமது தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான தமது நிலைப்பாடுகளை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்துவார்களே தவிர, வேறு எதுவும் நடக்காது. இதைத் நேரடி ஒளிபரப்புச் செய்து தமிழ் மக்கள் அனைவரும் பார்க்கக்கூடிய வசதிகளைச் செய்யும் வாய்ப்புக்களும் இல்லாத நிலையில் இந்த விவாதத்தாலும் இது விடயத்தில் தமிழ் மக்கள் ஒரு அரசியல் தெளிவைப் பெற்றுவிடுவார்கள் என்று கருத முடியாது. அதற்கான நிதிப் பலமோ தொழில்நுட்ப வசதிகளோ கொண்டதல்ல கூட்டிணைவு. அது ஒரு அரசியல் விருப்புக்கொண்ட சிறு குழுவின் முயற்சி. எனவே சுத்திச் சுத்தி சுப்பற்ற கொல்லைக்குள்ள என்ற வகையில்தான் இந்த விவாதமும் நடந்துமும் –முடியும்.**

**தமிழ் பொது வேட்பாளரை எப்படியும் நிறுத்தவேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கும் கூட்டிணைவைச் சேர்ந்த நான்கைந்து பேரும் குறைந்தபட்சம் பேரளவிற்காகவது அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமனால், தமது சரக்கை தமிழ் மக்களிடம் விற்பனை செய்வதற்கு இதைவிட நல்ல யோசனைகளைத் தேடிப்பிடிக்க வேண்டும்.**

## உறவுகளை உயிர்ப்புடன் வைத்திருப்போம்

வி. குமாரமுருகன்

தாத்தா, ஆச்சி, மாமா, அத்தை, சித்தி, சித்தப்பா, அத்தான், அண்ணி... இது போன்ற உறவுகள்கூட இப்பொழுது தூரத்துச்சொந்தங்களாக மாறிவிட்டன.

நவீன உலகத்தின் வேகத்துக்கு ஈடுகொடுத்து முன்னேறவேண்டும்என்றஒற்றைகுறிக்கோளுடன், சுற்றியுள்ள சுற்றத்தை பார்க்காமல் வாழ்ந்துவிட்டு கடைசியில் ஓய்வு காலத்தில் சுற்றமின்றி துக்கத்தில் வாழும் வாழ்க்கையை வாழும் கட்டாயமும் நவீன குடும்பங்களுக்கு ஏற்பட்டு வருகிறது.



பொருளாதார வசதியில் முன்னேறிக் காட்ட வேண்டும் என்ற வேகத்தில் கிராமத்தைவிட்டு வெளியேறி தொலைதூர நகரை நோக்கி ஓடியவர்களில் பெரும்பாலானோர், அந்த வேக ஓட்டத்துக்குப் பழகி, வேறு வழியின்றி அங்கேயே தங்களின் வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். ஆனால்,அவ்வப்பொழுது உறவுகளை உயிர்ப்பிக்க அவர்கள் மறப்பதால்தான் கடைசி காலத்தில் தங்கள் எண்ணங்களை பகிர ஆளின்றி மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள் என்பதும் உண்மைதானே.

முன்பெல்லாம் திருமணம் போன்ற சுக நிகழ்வுகள் என்றாலும், துக்க நிகழ்வுகள் என்றாலும் உறவுகள் கூட்டம் நம் இல்லத்தில் கூடி வேலைகளைப் பகிர்ந்து, எண்ணங்களை பகிர்ந்து, துக்கங்களை ,சந்தோஷங்களை பகிர்ந்து உடனிருந்து கவனித்து நமது உடல் பாரத்தையும், மன பாரத்தையும் குறைக்கும். ஆனால், இன்றோ குடும்பநிகழ்ச்சிகளில்பெயரளவிற்குதான்உறவுகள் வருவதும், முடிந்த கையோடு கிளம்புவதுமாக மாறிவிட்டது. நாமும் அதே போக்கைத்தான் நமது உறவுகளிடம் காண்பிக்கிறோம்.

இப்படி இருந்தால் எப்படி விஷயங்களை பகிர முடியும். சுக, துக்கங்களைப் பகிர உறவுகள் இருந்தால்தான் மனபாரம் குறையும். தவறுகளைப் புரிந்துகொண்டு செயல்பட முடியும்.

குடும்பங்கள்தான் சமூகத்தை உருவாக்கும் அடிப்படைக் கட்டமைப்பாக இருக்கும் நிலையில், உறவுகளுடன் இணக்கமாக உள்ள குடும்பங்களில் வளரும் குழந்தைகள் நல்சிந்தனையாளர்களாக வளர்ந்து நேர்மறையான பங்களிப்பினை குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் சமூகத்திற்கும் வழங்க முடியும். நிபந்தனையின்றி நாம் செய்யும் உதவிகள் சமூகம் முழுவதும் படரும்.

கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் நிலையில் சில சமயங்களில் பிள்ளை களைகக் கூட பாதுகாப்பாக விட்டுச் செல்ல முடியாத நிலை தற்போது உள்ளது. உறவுகளை உயிர்ப்புடன் வைத்திருந்தால் இது போன்ற நிகழ்வு நடக்காது.

உறவினர் ஒருவரின் வீட்டிற்கு பண்டிகை நாளன்று குடும்பத்தோடு சென்றிருந்தோம். அவருடைய ஒரே மகன் திருமணமாகி வெளிநாட்டில் மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறார். அவருக்கும் இரண்டு குழந்தைகள் உண்டு.

திருமணமாகி வெளிநாட்டுக்கு சென்ற மகன் பல வருடங்கள் ஆகியும் சொந்த ஊருக்கு வரவில்லை. குடும்ப விசேஷம், ஆண்டுக்கு ஒரு பண்டிகை நாளிலாவது மகனுடன் சேர்ந்து இருக்க வேண்டும் என்ற தந்தையின் ஆசை நிறைவேறாமல், ஏமாற்றம்தான் மிஞ்சியது.

அவர் சொன்ன ஒரு சொல் யோசிக்க வைத்தது. ";ஒரே மகன் போதும் என்று இருந்தது மிகப் பெரிய தவறுஎனஇப்பொழுதுதான்புரிகிறது. மகனின்படிப்பு, வளர்ப்பு ஒன்றே இலக்காகிப் போய், உறவுகளின் இல்லங்களுக்குச் செல்லாமல், அவர்களின் சுப, துக்கங்களில்கலந்துகொள்ளாமல்காலம்கடத்தியது தவறு" என்று அவர் உணர்ந்ததாகக் கூறினார். அதனால் மற்ற உறவுகள் தங்களைவிட்டு மனதளவில் பிரிந்து சென்றுவிட்டனர் எனவும், இப்போது பேச்சுத் துணைக்கு கூட ஆளில்லை என்றும் கூறினார்.

இன்றைக்குபலகுடும்பங்களில்இதேநிலைதான். இன்றைய குடும்பங்கள் 'ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு' என சுருங்கிவிட்ட நிலையில் வீடுகளில் நடைபெறும் சுபம் மற்றும் துக்க நிகழ்ச்சிகளில் செய்ய வேண்டிய 'கட்டுகளை' செய்வதற்கு உரிய உறவுகள் இல்லாமல் தவிக்கிறார்கள்.

உறவுகள் காலம் காலமாய் இணைந்திருக்கும் நிலை இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அன்றைய நாளில் ஒவ்வொரு சுப-துக்க நிகழ்வுகளிலும் ஒவ்வொரு உறவிற்கும் ஒரு கடமையை, 'கட்டுகளை' வைத்திருந்தார்கள். இதனால் மனமாச்சரியங்களை கடந்து உறவுகள் நீடித்திருந்தன. ஆனால், இன்றோ நிலைமை தலைகீழாக இருக்கிறது.

இளமைக் காலங்களில் உறவுகளின் உன்னதத்தை புரியாமல் விட்டதன் விளைவு, முதுமையடைந்த பின்னர்தான் தெரிய வருகிறது. ஆனால் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம். காலம் கடந்தபோன பின்வந்த ஞானத்தால் என்ன பயன்?

பண்டிகை நாட்கள், விடுமுறை நாட்கள் என சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் நமது சொந்த, பந்தங்களின் வீடுகளுக்கு ஒரு முறையாவது நம் பிள்ளைகளை அழைத்துச் சென்று அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்துப் பேசவிடுங்கள்.

திருமணங்கள்போன்றகுடும்பநிகழ்ச்சிகளுக்கு பெரியவர்கள் மட்டும் போகாமல் பிள்ளைகளயும் அழைத்துச் சென்று, அங்கு வந்துள்ள தூரத்து உறவுகளையும்அறிமுகம்செய்வதைவழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

காலப்போக்கில் நமது பிள்ளைகளும் உறவினர்களின் பிள்ளைகளும் உணர்வுபூர்வமாக நெருக்கம் அடையத் தொடங்கி விடுவார்கள். நல்லது, கெட்டதுகளை பேசுவார்கள். நமக்கு ஏதோ ஒன்று என்றால் நமக்கு துணையாக உறவுகள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வந்துவிடும்.

நம்பிக்கை வந்துவிட்டால் வாழ்க்கை வசமாகிவிடும். பிறகென்ன, மன உளைச்சலோ, மன அழுத்தமோ அவர்களின் வாழ்க்கையில் என்றுமே இல்லாமல் போய்விடும்.

உறவுகளின் மகத்துவத்தை உணர்ந்து, வாய்ப்பு கிடைக்கும்பொழுதெல்லாம் உறவுகளின் கரம் பிடித்து வலு சேர்த்தால் நிச்சயம் எதிர்காலம் சிறப்பானதாகஅமையும். உறவுகளைஉயிர்ப்புடன் வைத்திருப்போம்.

காலைக்கதிர் Kalaikkathir

# சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்களை சந்தித்தார் ஜீவன்

## 4 கோடி ரூபா செலவில் சீரமைப்பு பணிகளை முன்னெடுக்க பணிப்பு





நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மலையக பெருந்தோட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை ஞாயிற்றுக்கிழமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் போது போகாவத்தை, அக்கரபத்தனை, போடைஸ், சாஞ்சிமலை மற்றும் பொகவந்தலாவ பகுதியில் டியன்சின், கெம்பியன் பெற்றோசோ ஆகிய பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேவளை பெருந்தோட்ட தொழிலாளர்களைச் சந்தித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் 1700 ரூபா சம்பளம் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு பணிகளை உடனடியாக முன்னெடுக்குமாறு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்திற்குப் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது இந்த நேரடி சந்திப்பில் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் கொட்டகலை பிரதேச சபை முன்னாள் தலைவர் ராஜமனி பிரசாந்த், நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ரவி குழந்தைவேல், அக்கரபத்தனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கதிர்ச்செல்வன், அமைச்சரின் இனைப்பு செயலாளர் அர்ஜூன் ஜெயராஜ், அமைச்சரின் மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரிகள் ஆகியோர் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தனர். (05)

# ஏழு யானைகள் சடலங்களாக பொலன்னறுவையில் மீட்பு

பொலன்னறுவை வெள்ளப் பள்ளத்தாக்கு தேசிய பூங்காவின் ஹந்தபன்வில்லு ஏரியில் உயிரிழந்த ஏழு காட்டு யானைகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஏற் பட்ட வெள்ளப்பெருக்கின் பின்னர் சுற்றித் திரிந்த காட்டு யானைகள் ஓடை கால்வாயை கடக்கும் போது சேற்றில் அடித்து செல்லப்பட்டிருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த யானைகளில் 8 முதல் 10 வயதுக்குட்பட்ட ஐந்து குட்டி யானைகளும், 30 முதல் 35 வயதுடைய இரண்டு காட்டு யானைகளும் என நம்பப்படுகிறது.(05)

# மன்னாரில் ஞாயிறு முதல் நீர் வெட்டு முன்னறிவிப்பு இன்றி மக்கள் அவதி

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக வினியோகிக்கப்பட்டு வரும் குழாய் நீர் விநியோகம் எவ்வித முன் அறிவித்தல் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் தடைப்பட்டுள்ளமையால் மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனால் மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் நகர பகுதியில் உள்ள அதிகமான மக்கள் தமது வீடுகளுக்கு மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிநீர் இணைப்பை பெற்று தமது குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர்.

அண்மைக் காலமாக முன் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் குடிநீர் விநியோகம் தடை செய்யப்படும்.

எனினும் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் தற்போது வரை நீர் விநியோகம் எவ்வித அறிவித்தலும் இன்றி தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மேலும் மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கான பொறியியலாளர் ஒருவர் நிரந்தரமாக இல்லாத நிலையில் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

மன்னார், சின்னக்கடை பிரதான வீதியில் நீர் குழாயில் ஏற்பட்டுள்ள பாரிய நீர் கசிவை சீர் செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்ற நிலையே நீர் விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தூதரின் சாவு குறித்த விசாரைணைக்கு சகல உதவிகளையும் வழங்கத் தயார்

## இலங்கை தெரிவிப்பு

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ஃபிராங்கோயிஸ் பேக்டெட் திடீர் மரணம் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள இலங்கை இது தொடர்பில் அனைத்து உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் அதிகாரிகளிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த துயரமான தருணத்தில் இலங்கைக்கானபிரான்ஸ்தூதரகத்துடன்நெருங்கிய தொடர்பில் உள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறுதிநிகழ்வுகள் குறித்த ஏற்பாடுகளை அதிகாரிகள்அறிவிப்பார்கள்எனவெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.(05)

# அஹுங்கல்ல சூட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபர் கைது

அஹுங்கல்ல துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொஸ்கொடை பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை பெந்தர கஹ்பிலியாகந்த பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது, சந்தேகநபரிடமிருந்து 03 கிராம் 410 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நில்லபதன பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவராவார்.

மேலும்,கடந்த08ஆம்திகதிஅஹுங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அஹுங்கல்ல போகஹாபிட்டிய பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த நபரொருவரை சுட்டுக் கொலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# உண்டியல் உடைத்து திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது

### யாழ். ஆவரங்காலில்

யாழ்ப்பாணம் ஆவரங்கால் சிவன் ஆலயத்தில் உண்டியல் உடைத்து திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபரொருவர் ஞாயிற்றுக் கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆலயத்தில் திருடிவிட்டு மற்றொரு ஆலயத்தில் திருட முற்பட்ட போதே சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து திருடப்பட்ட பணமும் சில பொருள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# கல்விச் சாதனையாளர்களுக்கு நற்பிட்டிமுனையில் கௌரவிப்பு





(வி.ரி. சகாதேவராஜா)

நற்பிட்டிமுனை ஸ்ரீகணேசராலயம் சேனைக் குடியிருப்பு ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய நிருவாக சபை இணைந்து நடத்தும் மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு ஆலய தலைவர் த.ரவிராஜ் தலைமையில் நற்பிட்டிமுனை சுமங்கலி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு அதிதிகளாக கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்கின் பக்கீர், பெரிய


நீலாவணைவிசேடஅதிரடிப்படைதலைமை அதிகாரி சி.எஸ். ரத்நாயக்க மற்றும் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி, நற்பிட்டிமுனை ஆலயங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பொதுஅமைப்புக்கள்விளையாட்டு கழகங்கள், என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் தரம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை, க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை, உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான நினைவுச் சின்னமும் பணப்பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சீருடை நிதிப் பங்களிப்பை ஏ. யோகராஜ், கே.தேவகுமார் ஆகியோர் வழங்கிருந்தனர்.

மேலும் வருகை தந்த அதிதிகளால் மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் மற்றும் பணப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## தமிழ்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

ஒரு முன்னுதாரணமாக வைத்து ஜனநாயக வழியிலே எப்படியாக கருத்து பரிமாற்றங்களை ஒருவரை ஒருவர்வெளிப்படைத்தன்மையோடு பேச முடியும் என்பதையும் இதன் மூலம் நாங்கள் வெளிப்படுத்த முடியும். ஆகையினாலே அடுத்தமாதம்நடைபெறவுள்ளஇந்தக் கலந்துரையாடலில்அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கிறேன் என்றார்.

## எலான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது:

10ஆவதுஉலகநீர்மாநாடு'World Water Forum' இந்தோனேசியாவின் பாலி தீவில் கடந்த 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தோனேசிய ஜனாதிபதிஜோகோவிடோடோவின் உத்தியோகபூர்வஅழைப்பின்பேரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட தூதுக்குழுவினர் இதில் கலந்துகொண்டனர். அந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி மற்றும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலோன் மஸ்க் ஆகியோருக்கு இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

அதன்போது ஸ்டார் லிங் (Star link) திட்டத்தை இலங்கையில் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். இத்திட்டம்இலங்கையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் ஜனாதிபதியின் ஆதரவு தேவை என எலோன் மஸ்க் தெரிவித்தார். இலங்கையில் இவ்வாறான செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இந்தவருடஇறுதியில்இலங்கைக்கு வரவுள்ளதாகவும் எலோன் மஸ்க் குறிப்பிட்டுள்ளார். உண்மையில், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலோன் மஸ்க் போன்ற உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர்களின் முதலீடுகளை ஈர்க்க முடிந்தால், அது இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

இவ்வாறானதொரு செயற்திட்டத்தைஇலங்கையில்ஆரம்பிப்பதன் மூலம் இலங்கை முழு உலகிற்கும் திறக்கப்பட்டுள்ளது என்ற செய்தி உலகெங்கிலும்பரவும். இதன்மூலம் உலகின் கோடீஸ்வர வர்த்தகர்கள் இந்நாட்டிற்கு வருவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், ஸ்டார் லிங் போன்ற திட்டத்தில் இணைவதன் மூலம், நாட்டின் பின்னடைந்த பிரதேசங்களுக்கு எந்தச் சிக்கலும் இன்றி இணைய வசதிகளை வழங்க முடியும்.அது சுற்றுலாத் துறை உட்பட பொருளாதாரத்திற்குப் பயன்படும் பல துறைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் சலுகைக் கட்டண முறைகளின் கீழ் இணைய வசதிகளை வழங்குவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் ஸ்பேஸ் எக்ஸ் (Spacex) நிறுவனத்துடன் கலந்துரையாடவுள்ளதாகஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். ஸ்டார் லிங் திட்டம் தற்போது உலகில் 99 நாடுகளில் பரவியுள்ளது. மாலைத்தீவு, இந்தோனேசியா போன்ற நாடுகளும் இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வரும்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது இலங்கை அரசியலில் வழக்கமாகிவிட்டது. ஒரு விடயத்தை ஒருவர் வெற்றிகரமாகச் செய்யும்போது, அதற்குதடைகளைஏற்படுத்துவதும், அந்த முயற்சிகளுக்கு இடையூறு செய்வதும்அரசியலில்தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. ஆனால் இதுபோன்ற உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர்களை இந்த நாட்டுக்கு முதலீட்டாளர்களாக அழைப்பதை மக்கள் எதிர்க்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்' என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# தாந்தாமலை மலைப் பிள்ளையாருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது



(வி.ரி.சகாதேவ்ராஜா)

கிழக்கிலங்கையில் வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய மலைப்பிள்ளையாருக்கான மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 03.06.2024ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு எதிர்வரும் 30,31.05.2024ஆம் திகதிகளில் கிரியைகள் ஆரம்பமாகின்றன .

01,02.06.2024ஆம் திகதி ஆகிய இரு நாள்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து மறுநாள் 03.06.2024ஆம் திகதி கும்பாபிசேகம் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

குறித்த காலங்களில் விசேட பொதுப்போக்குவரத்துச்சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மேலும் அடியார்களுக்கு ஆலய அன்னதான சபையினரால் அன்னதான ஒழுங்கும் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.(05)

# ஜனாதிபதியின் வடக்கு வருகையின் போது பிராந்திய ஊடகவியலாளர்களுக்குத் தடை

ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது வடக்கு மாகாண பிராந்திய ஊடகவியலார்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என ஊடகவியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என நான்கு மாவட்டங்களிலும் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் மூன்று தினங்களாகக் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது ஜனாதிபதி செயலகத்தால் தெற்கில் இருந்து அழைத்து வரப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் நிகழ்வுகளில் செய்தி அறிக்கையிட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஊடக அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை கொண்டிருந்த வடக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு நிகழ்வுகளுக்கு செல்வதற்கும், செய்தி அறிக்கையிடவும் அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் வடக்கில் ஜனாதிபதி சென்ற இடங்களில் உள்ள பிராந்திய ஊடகவியலாளர்கள் ஜனாதிபதியின் நிகழ்வு நடைபெற்ற இடங்களுக்கு வெளியே நீண்ட நேரம் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05 - 100)

# விவசாய மேம்பாட்டுக்கு கிழக்கில் உழவு இயந்திரங்கள் வழங்கல்

## ஆளுநர் செந்தில் தொண்டமானால்





கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவுகளை அகற்றவும் விவசாயத்தை மேம்படுத்தவும் ஆளுநர் செந்தில் தொண்டமானால் இயந்திரங்கள் மற்றும் உளவு இயந்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம செயலாளர் ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் மதநாயக்க, உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் மணிவண்ணன், விவசாய அமைச்சின் செயலாளர் முத்துபண்டா ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# ஏழுஅடி சிவன் சிலையுடன் கூடிய சிவாலய மேற்தளத்திற்கான அடிக்கல் நாட்டு விழா!





(வி.ரி.சகாதேவராஜா)

ஏழுஅடி உயர சிவன் சிலையுடன் கூடிய மேற்தளத்திற்கான அடிக்கல் நாட்டு விழா மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய சிவன் ஆலயத்தில் நடைபெற்றது.

சுமார் 20 லட்சம் ரூபா செலவிலான இம் மேற்தள நிர்மாணப்பணியை அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த விவேகானந்தம் கமலாதேவி தம்பதியினர் உபயமாக வழங்கியுள்ளனர்.

சிவனாலய பூசகர் கே.கணேசன் அதற்கான கிரியைகளை மேற்கொண்டிருந்தார்.

அடிக்கல் நாட்டுவிழாவில் உபயகாரர் சார்பில் திருமதி கமலா தேவி விவேகானந்தம் , மகள் அகந்தினி, மகன்மார் சஜீவன், திரிசாந், மருமகன் இரஞ்சிதராசா ஆசிரியர், சகோதரி கலாராணி உள்ளிட்ட பலர் அடிக்கல் நாட்டினார்கள்.



ஆலயம் சார்பில் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, பொருளாளர் கே.கணேசன், கணக்காய்வாளர் ஏ.சுந்தரராஜன், உபதலைவர் த.சண்முகநாதன், உறுப்பினர்களான பி.சசிகுமார் ரி.சிவகாந்தன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர்.

சோழர்காலத்தில் நிருமாணிக்கப்பட்டு தூர்ந்து கிடந்த மடத்தடி மாட்டுப்பளையிலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த சிவன் ஆலயத்தில் ஏலவே அழகிய சிவலிங்கம் ஒன்று பிரதிஸ்டை செய்து வைக்கப்பட்டிருந்தது.

அச்சிவலிங்கத்திற்கு மேற்தளம் அமைக்கவே இவ் அடிக்கல் நடுவிழா நடைபெற்றது. நிருமாணப்பணிகள் ஒரு மாதகாலத்துள் நிறைவடையும் என உபயகாரர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

இது மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு மேற்காக வயல்சார்ந்த இயற்கை எழில்கொஞ்சும் மருத நிலத்தில் அமைந்துள்ளது.

சிவலிங்கமானது சிவனருள் பவுண்டேசன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குனருமான மு.ஜெயபாலனின் ஏற்பாட்டில் அம்மனின் கும்பாபிசேகமன்று (6.4.2022) அதிகாலையில் தமிழ்மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு தமிழ்முறைப்படி குடமுழுக்குசெய்யப்பட்டு பிரதிஸ்டை செய்துவைக்கப்பட்டமை தெரிந்ததே.

குறிப்பாக சோழர் இலங்கையில் பொலநறுவையை மையமாகக்கொண்டு 52ஆண்டுகள் ஆட்சி செய்த காலத்தில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகக்கூறப்படுகிறது. (05)

# பாதாள உலக கும்பலைச் சேர்ந்த நால்வர் துப்பாக்கியுடன் கைது

பாதாளஉலககும்பலைச்சேர்ந்த களு துஷாரவின் மகன் உட்பட நால்வர் துப்பாக்கியுடன் மாத்தறை குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை குற்றத் தடுப்பு பிரிவினருக்குக்கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மாத்தறை பிக்வெல்ல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகள் அடங்கிய பொதியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாதாளஉலககும்பலைச்சேர்ந்த மஹரகம கலு துஷார என்பவர் வெலிகடைசிறைச்சாலையில்கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மஹரகம கலு துஷாரவின் 24 வயது மகனும் அவரது மூன்று நண்பர்களும் விருந்தொன்றை ஏற்பாடுசெய்வதற்காகவும் துப்பாக்கியைச் சரிசெய்வது தொடர்பாகவும் கொழும்பிலிருந்து மாத்தறைக்கு சென்றுள்ளனர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் காரீய சுரங்கங்களில் முதலீடு செய்ய இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் போட்டி



இலங்கையின் மூலோபாய வளங்கள் சொத்துக்கள் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருவதற்கான மற்றுமொரு உதாரணங்களாக இலங்கையின் காரீய சுரங்கங்களில் முதலீடு செய்வதற்கு இந்தியா, சீனா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் போட்டியிடுகின்றன.

ஏற்கனவே இந்த தொழில்துறையில் கனடா, ஆஸ்திரேலியா நிறுவனங்கள் தங்களை ஈடுபடுத்தியுள்ள நிலையிலேயே இந்தியா, சீனா அமெரிக்கா போன்ற நாடுகள் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் உயர்தர காரீயம் காணப்படுவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

புவியியல் மற்றும் சுரங்க ஆய்வு பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரஞ்சித் பிரேமசிறி இந்தியா, சீனா உட்பட பல வெளிநாடுகள் இந்த துறையில் முதலீடு செய்ய ஆர்வமாகவுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

யார் அதிகபட்ட மதிப்புக்கூட்டலில் ஈடுபடுகின்றார்கள் மேம்பட்ட தொழில்துறைகளிற்காகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை பார்க்கவேண்டும் இலங்கையில் கைவிடப்பட்ட 3000 சுரங்கங்கள் உள்ளன நாங்கள் அதிகமாக கோரலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காரீய தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் இலங்கையும் இந்தியாவும் ஆராய்ந்துள்ளன. (05)

# வாழைச்சேனையில் கார் விபத்து கணவன் – மனைவி படுகாயம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனாணை பகுதியில் கார்விபத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை 5 மணியளவில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனாணை பகுதியில் வைத்து இடம்பெற்றது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் அல் ஹாஜ் ஹலால்தீன் என்பவர் தனது மனைவி, மூன்று பிள்ளைகளுடன் கொழும்புக்கு சென்று ஊர் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கார் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் காரில் பயணித்த கணவன் மற்றும் மனைவி இருவரும் காயமடைந்துள்ளனர்.

காரில் பயணித்து மூன்று பிள்ளைகளும் காயங்களின்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்தில் காயமடைந்த கணவனும் மனைவியும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வவுனியா முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பு

## தமக்கான கொடுப்பனவை அதிகரிக்குமாறும் கோரிக்கை

வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை கையளித்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்த நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக வருகை தந்த வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதியை சந்தித்து மகஜர் ஒன்றினை கையளித்து தமது பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிக்க முயற்சித்தனர்.

இருப்பினும், பாதுகாப்பு கடமையில் இருந்த உத்தியோகத்தர்களால் முன்பள்ளி ஆசிரியர்களை உள்ளே சென்று ஜனாதிபதியை சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லை. இதனையடுத்து குறித்த ஆசிரியர்கள் தமது மகஜரை கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஊடாக ஜனாதிபதிக்கு கையளித்தனர்.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் -

வவுனியா வடக்கு பகுதியில் முன்பள்ளி ஆசிரியர்களாக நாம் நீண்டகாலம் பணியாற்றுகின்றோம். எமக்கான உதவிக் கொடுப்பனவான 6 ஆயிரம் ரூபா என்பது தற்போதைய பொருளாதார நெருக்கடியில் போதாது. மாத சம்பளம் 60 ஆயிரத்திற்கு மேல் பெறுபவர்களே தமது குடும்பத்தை கொண்டு நடத்த முடியாது கஷ்டப்படுகின்றனர். ஆனால் நாம் 6000 ரூபா சம்பளத்துடன் எப்படி வாழ முடியும். எமக்கான சம்பளங்கள் அதிகரிக்கப்படுவதுடன், ஏனைய அரச சேவை போல் முன்பள்ளி ஆசிரியர்களையும் நிரந்தமாக அரசாங்க சேவைக்குள் உள்வாங்க வேண்டும்.

முன்பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் இல்லாத நிலை உள்ளது. அவை மேம்படுத்தப்பட வேண்டும். முன்பள்ளிகளையும் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வந்து அரச கட்டமைப்புக்களாக அவை மாற்றப்பட்டு அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இவ்வாறான பலவிடயங்களை உள்ளடக்கி மகஜர் ஒன்றினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்க வந்திருந்தோம். ஆனால் அனுமதி கிடைக்கவில்லை. இராஜாங்க அமைச்சர் ஊடாக கொடுத்துள்ளோம். ஜனாதிபதி இதனை கவனத்தில் எடுத்து நல்லதொரு முடிவை தருவார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அந்த முடிவுக்காக நாம் காத்திருக்கின்றோம் எனத் தெரிவித்தனர். (05-100)

# கொக்கிளாயிலிருந்து இயந்திரப்படகில் சந்நதி-கதிர்காம யாத்திரை குழுவினர



( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் சந்நதி- கதிர்காம ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் சனி மாலை கொக்கிளாயில் இருந்து இயந்திரப் படகுகள் மூலம் புல்மோட்டை வந்திருக்கின்றார்கள்.

சுமார் எட்டு படகுகளில் இருபது நிமிட நேரத்தில் சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தை கடலால் கடந்தனர். அவர்கள் கொக்கிளாயிலிருந்து தென்னமரவாடிக்கு படகுகளில் வந்து அங்கிருந்து 16 கிலோமீற்றர் தூரம் நடந்து புல்மோட்டையை அடைந்தனர். இல்லாவிட்டால் தரை வழிப் பாதை எனின் சுமார் 38 கிலோமீற்றர் சுற்றிவர வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது குழுவினர் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள்.

கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த இந்த பாதயாத்திரை நேற்று 15 ஆவது தினமாக சிறப்பாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

கதிர்காம பாதயாத்திரை பேரவையின் தலைவர் ஜெயாவேல்சாமி தலைமையில் இந்த குழுவினர் வந்து கொண்டிருக்கின்றார்கள் .

மொத்தமாக 124 அடியார்கள் இந்த பாதயாத்திரை குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரையான சந்நதி- கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி தலைமையிலான குழுவினர் 15 நாள்களின் பின்னர் சனிக்கிழமை அன்று கொக்கிளாயை அடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை திரியாயை அடைந்த அவர்கள் திங்கட்கிழமை நிலாவெளியை அடைவார்கள்.(05)

# முல்லை தியோநகர் மீனவர்கள் தொடர் போராட்டத்தில் குதிப்பு





சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கக் கோரியும் வீதி மறிக்கப்பட்டதைக் கண்டித்தும் முல்லைத்தீவில் தியோநகர் மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவிலிருந்து தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு கரையோர கிராமங்களில் ஒன்றான தியோநகர் பகுதியில் பிரதான வீதியையும், கடற்கரையினையும் இணைக்கும் இணைப்பு வீதி சில தரப்பினரால் மறித்து வேலி இடப்பட்டுள்ளது.

குறித்த வீதியூடாக மீனவர்கள் மீன்பிடிக்கு செல்ல முற்பட்ட போது வீதியானது வேலி அடைக்கப்பட்டு கற்கள் போடப்பட்டு மூடப்பட்டுள்ளது. அதனை கண்ட மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பின்னர் தியோநகர் மக்கள் ஒன்று கூடி வீதித்தடைகள், வேலிகளை அகற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பிரதேச மக்கள் கூறும் போது அந்தப் பகுதியில் சுற்றுலாத்தளம் ஒன்றை அமைத்துள்ள தனியார் நிறுவனம் ஒன்று தொடர்ச்சியாக மீனவர்களுக்குத் தொல்லை கொடுத்து வருவதாகவும், தமது வளங்களை சுரண்டி வருவதாகவும் கூறியுள்ளனர்.

அத்தோடு, தமது மீன்பிடிப்படகுகள் வலைகளை உள்ளே வைத்து வேலைக்கு செல்லும் பாதையை அடைத்ததோடு, கரையோரத்தில் மீன்பிடிப்பதற்கு சுதந்திரமாக விடுவதில்லை என்றும் மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அதிகாரிகளுக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை என்றும் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரும் உரிய முறையில் தீர்வை வழங்கவில்லை என்றும் தமக்கான நிரந்தரத்தீர்வு கிடைக்கும்வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (05)

# வலப்பனவில் ஒருவர் கைது ஹெரோயினும் சிக்கியது

ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

பாணந்துறை வலப்பன பிரதேசத்தை சேர்ந்த 37 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ 850 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் கைத்தொலைபேசியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை குற்றப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனமை குறிப்பிடத்தக்கது. (05)

# தேசிய இளைஞர் சேவை மன்ற வெசாக் விழா தம்பலகாமத்தில்



(ஹஸ்பர் ஏ.எச்)

வெசாக் தினத்தை முன்னிட்டு தேசியஇளைஞர்வெசாக்விழாவின் ஒரு பகுதியாக தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள 99 சிறீ சுகர்சனா ராம



விகாரை,முள்ளிப்பொத்தானை சுவர்ணமாலிவிகாரை,தம்பலகாமம் பிரதேசசெயலகம்ஆகியஇடங்களில் 24,25ஆம்திகதிகளில்இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், தம்பலகாமம் பிரதேச செயலகம்மற்றும்பிரதேசஇளைஞர் கழக சம்மேளனம் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்ததுடன்இதில்தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,இளைஞர்சேவைகள் அதிகாரி ஐ.ஜாபிர்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்உட்பட பௌத்த



மதகுருக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் போதை ஒழிப்பு தொடர்பிலான விழிப்புணர்வு, தர்ம கலந்துரையாடல், பக்திப்பாடல் போன்றனவும் இடம் பெற்றதுடன் முள்ளிப்பொத்தானை நிகழ்வின் போது நூடில்ஸ் தன்சலும் வழங்கி வைக்கப்பட்டன.இளைஞர்கள்,பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# இஞ்சியின் விலை சடுதியாக எகிறல்

இஞ்சியின் விலை மீண்டும் எகிறியுள்ளது.

ஒரு கிலோகிராம் இஞ்சியின் விலை 5,000 ரூபாவை எட்டியுள்ளதாக நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் இஞ்சியின் சில்லறை விலை 4,800 ரூபாவாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் போஞ்சிக்காயின் விலை 700 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் எலுமிச்சையின் விலை 1,800 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2024இல் வெளியிடப்பெற்றது